සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය

நலன்புரி நன்மைகள் சபை

WELFARE BENEFITS BOARD

# நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## வெற்றிடங்கள்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள நலன்புரி நன்மைகள் சபையில் உள்ள பின்வரும் வெற்றிடங்களுக்கு பொருத்தமான தகுதியும் அனுபவமும் உள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**பதவியணி நிலைகள் கொழும்பு தலைமை அலுவலகத்தில் மட்டுமே நிரப்பப்படும் என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்**

| **இல** | **பதவி** | **வெற்றிடங்களின் எணணிக்கை** | **தகைமைகள்** |
|---|---|---|---|
| 01 | நலன்புரி நன்மைகள் பிரதி ஆணையாளர் (நிதி முகாமைத்துவம்) MM-1-3 | 02 | <u>**தகைமைகள் மற்றும் அனுபவம்**</u><br><br><u>**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்: (கீழ் 1 அல்லது 2)**</u><br><br>1 கணக்கியல், நிதி முகாமைத்துவம், வர்த்தகம் ,வியாபார கற்கைகள் ஆகியவற்றில் இளமானிப் பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட, பதவி விடயத்துடன் தொடர்புடைய தொடர்புடைய வேறு ஏதேனும் பட்டம்.<br><br>மற்றும்<br><br>முதல் பட்டப்படிப்பைப் பெற்ற பிறகு, பதவி விடயத்துடன் தொடர்புடைய துறையில் குறைந்தது நான்கு (4) வருடகால பதவி அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்<br><br>அல்லது<br><br>2 இப்பதவியுடன் தொடர்புடைய பாடப்பகுதியைக் கொண்ட, அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனத்தின் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் இப்பதவியுடன் தொடர்புடைய துறையில் தகுதி பெற்ற பின்னரான குறைந்தபட்சம் நான்கு (04) வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்<br>.<br><u>**உள்ளக விண்ணப்பதாரர்கள்: (கீழ் 1 அல்லது 2)**</u><br><br><u>1.</u> மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு அவசியமான தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்<br><br>அல்லது |

2. MM 1-1 உள்ள ஒரு பதவியில், பதவியுடன் தொடர்புடைய விடயப் பரப்பில் குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்**: - 96,650 - 10 x 2,480 -15 x 3,450 - 173, 200 (MM 1-3)

**அடிப்படை சம்பள படிநிலை: - ரூ. 85,896/-** ( முகாமைத்துவ திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 01/2025-இன் அட்டவணை 11-இன் படி)

(திறைசேரி சுற்றறிக்கைகளின்படி அங்கீகரிக்கப்பட்ட அரசின் கொடுப்பனவுகள் மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் உரித்தாகும்)

**கடமைகளும் பொறுப்புகளும்**

- மாதந்தோறும் நலன்புரி நன்மைகளைப் பெறுவதற்கு தகுதியுள்ள சுமார் 02 மில்லியன் பயனாளிகளுக்கு, அவர்களின் வங்கிக் கணக்குகள் வாயிலாகக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

- சிறுநீரக நோயாளிகளுக்கான உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை ஆகியவற்றைப் பெறுபவர்களுக்கு அவர்களின் கணக்குகள் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்

- ஒவ்வொரு மாதமும் உரிய கொடுப்பனவுகள் தொடர்பான மாதாந்த கொடுப்பனவு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் உரிய பயனாளிகள் உதவித்தொகையைப் பெறுகிறார்களா என்பதை உறுதிப்படுத்தத் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

- வங்கி கணக்கு மாற்றம் தொடர்பான புதிய கோரிக்கைகளைக் கையாளுதல்.

- தகவல்களை மறைத்து உதவித்தொகையைப் பெறுவது தொடர்பான முறைப்பாடுகள் அல்லது தகவல்கள் கிடைக்கப் பெறும்போது அது தொடர்பாக விசாரித்து, அத்தகைய கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- மோசடியான முறையில் உதவித்தொகை பெறப்பட்ட சந்தர்ப்பங்களில், அக்குறித்த பணத்தை மீட்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் மேற்குறித்த உதவித்தொகை வழங்குவது தொடர்பாக வங்கிகளுடன் உரிய ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல்.

- நலன்புரிக் கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பாக மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பைப் பேணுதல்.

| | | | |
|---|---|---|---|
| | | | • நிதி முகாமைத்துவம் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு தெரிவிப்பதற்கு வருடாந்த புள்ளிவிவரங்களைச் சமர்ப்பித்தல்.<br><br>• தேவைக்கேற்ப பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| 02 | நலன்புரி நன்மைகள் உதவி ஆணையாளர் தொடர்பாடல்) MM-1-1 | 01 | <u>**தகைமைகள் மற்றும் அனுபவம்**</u><br><br><u>**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**</u><br><br>1. வெகுசனத் தொடர்பாடல் ,சந்தைப்படுத்தல, கருத்திட்ட முகாமைத்துவம், வியாபார நிர்வாகம் ஆகியவற்றில் இளமானிப் பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட, பதவி விடயத்துடன் தொடர்புடைய தொடர்புடைய வேறு ஏதேனும் பட்டம்.<br><br>மற்றும்<br><br>முதல் பட்டப்படிப்பைப் பெற்ற பிறகு, பதவி விடயத்துடன் தொடர்புடைய துறையில் குறைந்தது ஒரு வருடகால பதவி அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்<br><br><u>**உள்ளக விண்ணப்பதாரர்கள்**</u><br><br><u>1.</u> மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு அவசியமான தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்<br><br>**சம்பள அளவுத் திட்டம்**: - 91,690- 10 x 2,480 -15 x 3,450 - 168, 240 (MM 1-1)<br>**அடிப்படை சம்பள படிநிலை: -** ரூ.81,710/- ( முகாமைத்துவ திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 01/2025-இன் அட்டவணை 11-இன் படி)<br>(திறைசேரி சுற்றறிக்கைகளின்படி அங்கீகரிக்கப்பட்ட அரசின் கொடுப்பனவுகள் மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் உரித்தாகும்<br><br>**கடமைகளும் பொறுப்புகளும்**<br><br>• நிவாரண நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான அவசியத் தகவல்களைச் சேகரித்தல் தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைத்து அரச அதிகாரிகளையும் ஈடுபடுத்துதல் மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்தல்.<br><br>• பொதுமக்கள் மற்றும் பயனாளிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அத்துடன் அனைத்து ஊடகங்களையும் (ஒலி, ஒளி மற்றும் அச்சு ஊடகங்கள்) ஈடுபடுத்தி நிகழ்சித் திட்டத்தை தயாரித்தல் மற்றும் வெளியிடுதல்.<br><br>• “அஸ்வெசும“ நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான நிகழ்ச்சித் திட்ட அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை மக்களுக்கு வெளியிடுதல். |

| | | | |
|---|---|---|---|
| | | | • காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் தொடர்பாக பொதுமக்கள், பயனாளிகள், அரச அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஊடகங்களுக்குத் தகவல் அளித்தல்.<br><br>• நிறுவன மட்டத்தில் புதுமையான மற்றும் ஆக்கபூர்வமான தொடர்பாடல் தந்திரோபாயங்களை உருவாக்குவதிலும் செயல்படுத்துவதிலும் நிபுணத்துவத்தை வெளிப்படுத்தல் |
| 03 | உள்ளக கணக்காய்வாளர் | 01 | **தகைமைகள் மற்றும் அனுபவம்**<br><br>**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்: (கீழ் 1 அல்லது 2)**<br><br>1 கணக்கியல், நிதி முகாமைத்துவம், வர்த்தகம் ,வியாபார கற்கைகள் ஆகியவற்றில் இளமானிப் பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட, பதவி விடயத்துடன் தொடர்புடைய தொடர்புடைய தொடர்புடைய வேறு ஏதேனும் பட்டம்.<br><br>மற்றும்<br><br>முதல் பட்டப்படிப்பைப் பெற்ற பிறகு, பதவி விடயத்துடன் தொடர்புடைய துறையில் குறைந்தது ஒரு (1) வருடகால பதவி அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்<br><br>அல்லது<br><br>2 இப்பதவியுடன் தொடர்புடைய பாடப்பகுதியைக் கொண்ட, அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனத்தின் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் இப்பதவியுடன் தொடர்புடைய துறையில் தகுதி பெற்ற பின்னரான குறைந்தபட்சம் ஒரு (1) வருட அனுபவம் பெற்றிருத்தல். வேண்டும்<br>.<br>**உள்ளக விண்ணப்பதாரர்கள்**<br><br>**1.** மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு அவசியமான தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்<br><br>**சம்பள அளவுத் திட்டம்**: - 91,690- 10 x 2,480 -15 x 3,450 - 168, 240 (MM 1-1)<br>**அடிப்படை சம்பள படிநிலை: -** ரூ.81,710/- (முகாமைத்துவ திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 01/2025-இன் அட்டவணை 11-இன் படி)<br>(திறைசேரி சுற்றறிக்கைகளின்படி அங்கீகரிக்கப்பட்ட அரசின் கொடுப்பனவுகள் மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் உரித்தாகும்)<br><br>**கடமைகளும் பொறுப்புகளும்**<br><br>• திணைக்களத்தின் பணிகள் நிதி ஒழுங்கு முறைகள், தாபன விதிக் கோவை , வழிகாட்டுதல்கள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | சுற்றறிக்கைகளுக் இணங்க மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதைச் சரிபார்த்தல்.<br>• வருடாந்த உளளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்.<br>• கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு கூட்டங்களை நடத்துதல்.<br>• ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கைகள் உட்பட கணக்காய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.<br>• ஒதுக்கீட்டுக் கணக்கு, முற்பண கணக்கு "பி" மற்றும் வைப்புக் கணக்குகள் உள்ளிட்ட கணக்குப பிரிவின் செயல்பாடுகளைச் சரிபார்த்தல்.<br>• உளளக கணக்காய்வு மற்றும் கட்டுப்பாட்டு செயல்திறனை மதிப்பீடு செய்தல்.<br>• திணைக்களத்தின் நிதிப் பதிவேடுகளின் துல்லியத்தன்மையை உறுதி செய்தல்<br>• பதவியணியியனரின் செயல்திறனின் தரம் மற்றும் வெற்றியை சரிபார்த்தல்.<br>• அரச சொத்துக்கள் மற்றும் திணைக்களத்தின் உடைமையிலுள்ள சொத்துக்களின் பாதுகாப்பைச் சரிபார்த்தல்<br>• இத்திணைக்களம் தொடர்பாக கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளுக்கு தேவையான தகவல்களை வழங்குதல் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உதவுதல்.<br>• பணிப்பாளர் நாயகத்தால் அவ்வப்போது வழங்கப்படும் ஏனைய கடமைகளை மேற்கொள்ளுதல். |

**வயதெல்லைகள்**

<u>பிரதி நலன்புரி ஆணையாளர், உதவி நலன்புரி ஆணையாளர், உள்ளக கணக்காய்வாளர் -</u>

22வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகாது.

**பொதுவான நிபந்தனைகள்: -**

- ஊழியர் சேமலாப நிதிக்கு சம்பளத்தில் 8% செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் அரசாங்க பங்களிப்பான 12% த்தினை நலன்புரி நன்மைகள் சபை செலுத்தும். மேலும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான 3% பங்களிப்பு நலன்புரி நன்மைகள் சபையினால் செலுத்தப்படும்.
- நேர்முகப்பரீட்சையில் பெறுகின்ற அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.
- இப் பதவி நிரந்தரமானது. பதவி நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

**மாதாந்த ஊதியம்:**

- MM 1-3 - 2025 ரூபா. [96,650 - 10 x 2,480 - 15 x 3,450 – 173,200] + அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்,
- MM 1-1-2025 ரூபா. [91,690 – 10 x 2,480 - 15 x 3,450 – 168,240] + அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்,
- சம்பளத்தில் 8% ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிக்க வேண்டும், மேலும் நலன்புரி நன்மைகள் சபை 12% அரசாங்க பங்களிப்பாக செலுத்தும். மேலும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% பங்களிப்பு நலன்புரி நன்மைகள் சபையால் செலுத்தப்படுகிறது.

- விண்ணப்பப்படிவத்தை பின்வரும் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யமுடியும்
- http://www.treasury.gov.lk/web/ministry-of-finance/vacancies
- https://www.wbb.gov.lk/web/si/jobs

- பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை **2026.10.05**…ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்,**ஆணையாளர், நலன்புரி நன்மைகள் சபை, J.R.ஜெயவர்தன மத்திய நிலையம், 191, தர்மபால மாவத்த, கொழும்பு – 07**.எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும், விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

- அரசாங்க /கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். தாமதித்து கிடைக்கும், பூரணமற்ற அல்லது இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்தால், விண்ணப்பங்களை தனித்தனி உறைகளில் இணைத்து ஒவ்வொரு பதவிக்கும் **சான்றிதழ்களின் நகல்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்**.

இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல், திருத்துதல், மாற்றியமைத்தல் அல்லது விண்ணப்பதாரிகளை சுருக்க பட்டியற்படுத்தல் தொடர்பில் நலன்புரி நன்மைகள் சபையின் தலைவருக்கே அனைத்து உரிமைகளும் உண்டு

**ஆணையாளர்**
**நலன்புரி நன்மைகள் சபை**
**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**